**கவனிக்க.**- *03.05.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1810 - 2013 මැයි මස 10 වැනි වැනි සිකුරාදා - 2013.05.10

*1810 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*


*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1146 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1161 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1162 |


**கவனிக்க.**- (i) *மீள குடியமர்த்துதல் அதிகாரசபை (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**கவனிக்க.**- *இவ்வர்த்தமானியின் பகுதி* V *இல் 2010 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல் - யூன்) புத்தகப்பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

### உக்குவெல பிரதேச சபை

*மத்திய மாகாண சபையின் உக்குவெல பிரதேச சபைக்கான காவலாளர்/வாகன ஓட்டுநர்/சுகாதாரத் தொழிலாளர்/மின்சாரத் தொழிலாளர்/மருந்துக் கலவையாளர்/நீர்த் தொழிலாளர் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு*

மத்திய மாகாண அரச சேவையில் உக்குவெல பிரதேச சபையில் வெற்றிடங்களாகவுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்வதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள உக்குவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| காவலாளர் (அ. ஊ. சே. தரம் III) | 02 | 06/2006 (IV) PL 1 12 ஆவது படி ரூபா 13,060-130×14-ரூபா 14,880. (நான்காவது சம்பளப்படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| வாகன ஓட்டுநர் தரம் III) | 01 | 06/2006 (IV) PL 3 ரூபா 12,470-130×18- ரூபா 14,810. (நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட வாகன ஓட்டுநருக்கான C, CI, D, DI, G தொகுதியின் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>பகல் இரவு காலங்களில் சேவையில் ஈடுபடுவதற்குரிய உடற்தகுதியுடன் சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.<br><br>ஆகக்குறைந்தது 05 அடியாக உயரம் இருத்தல் வேண்டும்.<br><br>வீதிப் போக்குவரத்து பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| நூலக உதவியாளர் (அ. ஊ. சே. தரம் II) | 01 | 06/2006 (IV) PL 1 12 ஆவது படி ரூபா 13,060-130×14-ரூபா 14,880. (நான்காவது சம்பளப்படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| சுகாதாரத் தொழிலாளர் (அ. ஊ. சே. தரம் III) | 07 | 06/2006 (IV) PL 1 12 ஆவது படி ரூபா 11,730-120×18-ரூபா 13,890. (நான்காவது சம்பளப்படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | தரம் 08 (ஆண்டு 9) இற்குரிய பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். |

| பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| மின்சாரத் தொழிலாளர் | 01 | 06/2006 (IV) PL 2<br>ரூபா 12,210-130×18-<br>ரூபா 14,550.<br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற் திறமையும் தேர்ச்சியும்**<br><br>* தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமையின் (NVQ - 2) 2 அல்லது (NVQ-3) 3 ஆம் மட்டச் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>* தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>* தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப்பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>* இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை (VTA) யில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>* தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது<br><br>* மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவன மொன்றில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாட நெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>* நாவின்ன/கெரமினிய/விக்கிரமாரச்சி ஆயுர் வேதத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஏனைய ஆயுர்வேத மருந்தகத்தில்/மருத்துவ மனையில் அல்லது வித்தியாலயத்தில் மருந்துக் கலவை பற்றிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.<br><br>**அனுபவம்** :<br>ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (பயிற்சிக் காலம் குறைந்தது 02 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.) |
| மருந்துக் கலவையாளர் | 01 | 06/2006 (IV) PL 2<br>ரூபா 12,210-130×18-<br>ரூபா 14,550.<br>(நான்காவது சம்பளப் படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **தொழில்நுட்ப தேர்ச்சிகள்/அனுபவங்கள்**<br>* நாவின்ன/கெரமினிய/விக்கிரமாரச்சி ஆயுர்வேத வித்தியாலயம் அல்லது ஆயுர்வேதத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆயுர்வேத மருந்தகத்தில்/ வித்தியாலயத்தில் மருந்துக் கலவையாளர் பற்றிய ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறியொன்றை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாகும்.<br><br>**அனுபவங்கள் :**<br>அரச அல்லது மாகாண சபை அல்லது உள்ளூராட்சி நிறுவன ஆயுர்வேத மத்திய நிலையமொன்றில் மருந்து கலப்பாளராக வருடமொன்றிற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் (பயிற்சி காலம் குறைந்தபட்சம் 2 வருடங்களாகும்.) |
| நீர்த் தொழிலாளர் | 02 | 06/2006 (IV) PL 1 ரூபா 11,730-120×18-ரூபா 13,890. (நான்காவது சம்பளப்படிக்கு வர முன்னர் தகுதிகாண் தடை உண்டு.) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழியுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடரான 3 வருட காலம் உக்குவெல பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது. இந்தச் சலுகை அரச/மாகாண அரச சேவையில் உள்ள நிரந்தர அலுவலர்களுக்கு மட்டும்)

(iv) உக்குவெல பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

(v) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன், குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் கருதப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(vi) அரச/மாகாண அரச சேவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

**3. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை.

(ii) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்பு உரித்துண்டு.

(iii) நியமனங்கள் 03 வருடகாலம் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும்.

(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும் மத்திய மாகாணசபை அல்லது மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

**4. விண்ணப்பத்துடன் முன்வைக்கப்படவேண்டிய ஆவணங்கள்:**

(1) கட்டமைப்புக்கான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

(2) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது முதற்பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(iii) தமது வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளர் வழங்கிய சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெறப்பட்ட 02 குணச் சான்றிதழ்கள் (அவற்றில் ஒன்று வதிவிடக் கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.) ;

(v) தொழில் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

(அரச அல்லது மாகாண அரச சேவை அல்லது உள்ளூராட்சி சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவரூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.)

05. அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

06. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட்டு, "செயலாளர், பிரதேச சபை, உக்குவெல என்ற முகவரிக்கு 2013.06.17 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (தற்போது மாகாண அரச சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.) உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும், மாற்றியமைக்கும், அல்லது திருத்தியமைக்கும் அறிவிப்பை இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரங்களும் உக்குவெல பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

எம். ஜீ. விமலசேன,
செயலாளர்,
உக்குவெல பிரதேச சபை.

உக்குவெல பிரதேச சபை அலுவலகம்,
உக்குவெல,
2013.04.18.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**உக்குவெல பிரதேச சபை**

................................ பதவி

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
5. பிறந்த திகதி :- வருடம் :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உள்ளவாறான வயது :-
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
8. விவாகமானவர்/தனித்தவர் :----.
9. ஆண்/பெண் :----.
10. நீர் இலங்கைப் பிரசையா? பதிவினாலா அல்லது வம்சாவளியினாலா :----.
11. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைக்க) :-
   க. பொ. த. (சா. த.) பரீட்சை
   சித்தியெய்திய வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை
சித்தியெய்திய வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

12. (i) ஏனைய கல்வித் தகைமைகள் :----.
(ii) தொழிற் தகைமைகள் :----.
(iii) சேவை அனுபவம் :-
1. தற்போது சேவையாற்றும் நிறுவனம் ;
2. தற்போது வகிக்கும் பதவி ;
3. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி ;
4. இதற்கு முன்னர் சேவையாற்றிய நிலையமும் வகித்த பதவியும்.

13. நீங்கள் தற்போது இந்தச் சபையில் சேவையாற்றுவதாயின் தற்போது வகிக்கும் பதவி :----.
நிரந்தரம்/சமயோசிதம்/தற்காலிகம்/ஒப்பந்தம் /பதிலீடு :----.
அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

14. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கருதப்பட்டவரா? :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின், நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு உடன்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் உள்ளோரது விண்ணப்பங்கள் தொடர்பில் நிறுவனத் தலைவரது உறுதியுரை**

திரு./திருமதி/செல்வி ----------------- என்பவர் இந்த நிறுவனத்தில் ----------------- ஆக பதவி வகிக்கிறார். இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வகையிலேனும் குற்றமொன்றுக்கு உட்படுத்தப்படவில்லை என உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்கின்றேன்.

-----,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

5-235

---

**திஹகொட பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு

திஹாகொட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்த மற்றும் தென் மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு. தற்போது திஹகொட பிரதேச சபையில் நிரந்தர/அமைய/தற்காலிக/பதில்/கொந்திராத்/முறையில் சேவை புரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| 01. ஆயுர்வேத கூலியாள் | 01 | ரூபா 11,730 - 10 × 120 - 10 ×130 - 10× 145-12×160-ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலையொன்றில் குறைந்தளவில் ஐந்தாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல். (ஆண்டு 06) |
| 02. வீதி | 02 | ரூபா 11,730 - 10 × 120 - 10 ×130 - 10× 145-12×160-ரூபா 17,600 | கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலையொன்றில் குறைந்தளவில் ஐந்தாம் தரத்தில் சித்தியடைந்திருத்தல். (ஆண்டு 06) |

**விண்ணப்பதாரர்களுக்கு தேவையான ஏனைய தகைமைகள் மற்றும் பொது நிபந்தனைகள் :**

(1) அரச சேவையில் மற்றும் அரச கூட்டுத்தாபனத்தில் சேவை புரிந்து திறமையின்மை காரணமாக கட்டாயமாக ஓய்வுபெறச் செய்தவர் அல்லது சேவையிலிருந்து நீக்குவதற்கு பதிலாக மனிதாபிமான வேறு செயற்பாடாக ஓய்வுபெறச் செய்தவர் அல்லது தண்டனைக்காக ஓய்வுபெறச் செய்தவர், அல்லது வினைத்திறமைப் பரீட்சையின் பின் சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக அல்லது தமது பதவியை விட்டுச்சென்றவராக இருத்தல் கூடாது.

(2) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராக நடத்தப்பட்ட நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(3) ஏதாவது நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது குற்றவியல் வழக்கு சரத்தின் 449 ஆவது சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(4) சொத்துக்கள் சூனியமாக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

(5) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(6) நன்னடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(7) 2013.06.07 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு கூடாததுமாக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கணகிக்கப்படமாட்டாது.

(8) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு தென் மாகாணத்தினுள் குறைந்தளவு 03 வருட கால நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(9) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல் அனைத்து தகுதிகளும் திஹகொட பிரதேச சபையின் அதிகாரத்தின்படியே.

**விசேட தகைமைகள் :**

(1) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு குறைந்தளவு திஹகொட பிரதேச சபை வளுப் பிரதேசத்தினுள் 03 வருட கால நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(2) வீதி ஊழியர் பதவி தொடர்பாக முச்சக்கர வண்டி மற்றும் நிறை வாகன சாரதி உத்தரவுப்பத்திரம் இருத்தல். மின்சார தொழில்நுட்ப மற்றும் இயந்திர இயக்கம் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல். மோட்டார் வாகன தொழில்நுட்பம் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல். தச்சுத் தொழில் தொடர்பாக அறிவு பெற்றிருத்தல். விசேட தகைமைகளாக கருதப்படும்.

(3) தற்போது திஹகொட பிரதேச சபையில் சேவை புரிந்து சம்பளம் பெறுதல் விசேட தகுதியாகும். இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ஆட்சேர்க்கும் முறை.**- அனைத்து விண்ணப்பதாரிகளும் சட்டபூர்வமான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு முகம் கொடுத்த பின்பே தகைமைகளின்படி ஆட்சேர்ப்பு நடைபெறும்.

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் உடையதாகும். விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உரித்துடையவர் ஆவர்.

(2) இந்த ஆட்சேர்ப்பு அரச கொள்கைகளுக்கும் தென் மாகாண சபையின் அரச சேவை கொமிசன் சபை தென் மாகாண சபையினால் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் சுற்று நிருபங்களுக்கும் திணைக்களத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும்.

(3) அரச உத்தியோகத்தர்களின் பிணைக்கட்டளைச் சட்டத்தின்படி பிணைக்காக கையொப்பமிடல் வேண்டும்.

(4) அரச கொள்கைகளுக்கு இணங்க விதிக்கப்பட்ட மொழிதிறன் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) ஆட்சேர்ப்பு தொடர்பான நிபந்தனைகளின்படி போலித் தகவல்கள் கொடுத்திருப்பது தெரியவந்தால் ஆட்சேர்ப்பு இரத்துச் செய்யப்படும்.

(6) சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் இடமாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவர்.

(7) இப்பதவி 03 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதோடு 03 வருடத்தின் பின் வேலை, வருகை, நடத்தை என்பன சிறந்த நிலையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கப்படவேண்டிய முறை.-** இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2013.06.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "தலைவர், திஹகொட பிரதேச சபை, திஹகொட" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது திஹகொட பிரதேச சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்து உறுதிப்படுத்தி கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும்.

தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் தாங்களின் விண்ணப்பப்படிவங்களை நிருவாகத் தலைவருடாக அனுப்பிவைக்கப்படவேண்டியதோடு, உரிய திகதிக்குப் பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பபத்திரங்கள் இரத்துச் செய்யப்படும்.

விண்ணப்பப்பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்) ;

(4) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;

(5) வேறு தகுதிகளைக் கொண்ட சான்றிதழ்.

நிர்மாள் சமரசிங்க,
தலைவர்,
திஹகொட பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**திஹகொட பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையில் ................................ பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

   (ஆ) முதலெழுத்துக்களை குறிப்பிடும் பெயர் :----.

2. நிரந்தர வதிவு மாவட்டம் :----.

3. நிரந்தரமாக வதியும் பிரதேச செயலகம் :----.

4. நிரந்தர விலாசம் :----.

5. ஆண்/பெண் :----.

6. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :----.

7. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

9. இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பிராஜா உரிமை மூலமா? பதிவின் மூலமா? :----.

10. கல்வித் தகைமைகள் :----.

11. வேறு தகைமைகள் :----.

12. தொழில் பயிற்சி :----.

13. விசேட தகைமைகள் :----.

14. சேவை அனுபவம் :----.

15. (அ) தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.

(ஆ) தற்போதைய பதவி :----.

(இ) தற்போது வசிக்கும் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட திகதி :----.

(உ) இதற்கு முன் சேவை புரிந்த பதவியின் தன்மை :----.

இந்த விண்ணபப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் பிழைகள் எதுவும் இல்லை எனவும் உறுதிமொழிகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் இரத்துச் செய்யப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஏதுவாகும் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5-295

---

**கல்கமுவ பிரதேச சபை**

தொழில்நுட்ப, தொழில்நுட்பமற்ற சேவையில் III தரத்திலான பதவிக்காக ஆட்சேர்ப்பு

வடமேல் மாகாணத்தில் கல்கமுவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தர வதியுனரிடத்திலிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

கல்கமுவ பிரதேச சபையில் தற்போது சேவையில் உள்ள நிரந்தர, அமைய, தற்காலிக மற்றும் தொண்டர் சேவையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொடர் எண் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | இயந்திர தொழிலாளர் | 01 | 06/2006 (IV) அரச நிருவாக சுற்று நிருபப்படி PL - 2006 A ரூ. 12,210-10×130-10×145-10×160- 12×170- ரூ. 18,600. | 1. கல்வி பொது தராதரப் பத்திர சாதாரணத்தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் இரண்டு பாடங்களுக்கு விசேட சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர்ந்த)<br>2. தற்போது மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (9 ஆம் வருடம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>3. பொதியில்லாத எடை ஹொண்டர் 34 இற்கு அதிக மோட்டார் முற்பகுதியும் பார ரேலர் மூலம் 32 பேருக்கு அதிகமான பயணிகளை கொண்டு செல்லக்கூடிய பஸ்வண்டியை செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட தகுதி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | சுகாதார தொழிலாளி | 03 | 06/2006 (IV) அரச நிருவாக சுற்று நிருபப்படி P.L. 1- 2006 A ரூ. 11,730-10×120-10×130-10×145-10×160-12×160- ரூ. 17,600. | அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (9 ஆம் வருடம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**2. தேவையான வேறு தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரர் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசி திகதிக்கு 03 வருட காலத்திற்கு குறையாது கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வாக்குப் பட்டியலில் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழினால் உறுதிப்படுத்த வேண்டும்)

(3) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.)

(4) நல்லொழுக்கமும் நல் சரீர சுகமுடையவராயிருத்தல் வேண்டும்.

(5) தண்ட நீதி சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவரல்லாது இருத்தல் வேண்டும்.

**3. ஆட்சேர்ப்பு முறை :-**

(1) தேவைக்கேற்ப முறையாக நேர்முகப் பரீட்சைக்காக கலந்துக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமையும் வாய் மொழிமூல பரீட்சையின் பெறுபேறுபடி ஆட்சேர்ப்பு நடைபெறும்.

(2) தற்போது இந்த பிரதேச சபையில் நிரந்தர/தற்காலிக/அமைய/மாதிரி/கொடுப்பனவு/தொண்டர் மூலம் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மேலதிக கவனம் செலுத்தப்படும்.

(3) உரிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**4. சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் :**

(1) எல்லாப் பதவிகளும் நிரந்தர ஓய்வூதியம் உடையது ;

(2) உரிய வண்ணம் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உள்ளாதல் வேண்டும் ;

(3) ஆட்சேர்ப்பு செய்து கொள்ளப்படும் ஒருவர் 03 வருட நன்னடத்தை காலத்திற்கு உற்படுவதுடன், தரப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்படுவாராயின் ஒரு வருட காலத்திற்கு வேலைப் பார்க்கும் காலத்திற்கு உற்படுதல் வேண்டும் ;

(4) அரசகரும மொழி கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக விசேடமாக அரச கரும மொழிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காகவும், தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதும் இதன் பின் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கு உடன்படல் வேண்டும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக கௌரவ வடமேல் ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டுள்ள சேவை சட்டத்திட்டங்களுக்கும், நிதிச் சட்டத்திட்டங்களுக்கும் அரச திணைக்கள கோட்பாடுகளுக்கும் வடமேல் மாகாண சபையினால் அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுதலுக்கு விண்ணப்பதாரி உடன்படல் வேண்டும்.

**5. விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை :-**

(1) விண்ணப்பதாரிகள் இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரப்படி விண்ணப்பப்படிவம் 2013.03.06 ஆந் திகதி முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

(2) விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியினை குறிப்பிடப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றதழ் ;
(iii) தங்களது வதிவினை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளர் சான்றுப்படுத்தல் வேண்டும் ;
(iv) அண்மையில் பெற்றுக்கொண்ட சான்றிதழ் (ஒன்று கிராம அலுவலரினால் பெற்றுக்கொண்டதாக இருத்தல் வேண்டும்) ;
(v) தொழில் தகைமை பற்றிய சான்றிதழ் (அரச/உள்ளூராட்சி நிறுவனத்தில் சேவையாற்றியவர்கள் தங்களின் விண்ணப்பங்கள் திணைக்கள/நிருவாக தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.)

ஏ. பீ. நிமல் ரத்நாயக்க,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

கல்கமுவ பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2013.04.22.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்கமுவ பிரதேச சபை**

.......................... பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர் :----.
02. நிரந்தர முகவரி :----.
03. பிறந்த திகதி :- ஆண்டு :-----, மாதம் :----, திகதி :----.
2013.06.03 திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
05. ஆண்/பெண்:----.
06. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி :----.
07. சாதி :----.
08. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவு காலம் :----.
09. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா? :----.
10. கல்வத் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-
(i) சித்தியெய்திய வருடம் தரம் :-----. வருடம் :-----.
(ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை
பரீட்சை இலக்கம் :-----. வருடம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை
பரீட்சை இலக்கம் :-----. வருடம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

11. தொழில் தகைமையும் அனுபவமும் :----.
12. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அந்த சேவை காலமும் விபரமும் :----.
13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி உள்ளீரா? :----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் என்னால் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ்படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
*(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)*

இந்த விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையற்றது என்றும் இவரை தேர்ந்தெடுக்கப்படின் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு நான் உடன்படுகின்றேன் என்று தற்போது ......................................... ஆக சேவை செய்கின்றார் என்று சிபாரிசு செய்கின்றேன்.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்:

திகதி :----.

5-296

திருத்தம்

**பாத்ததும்பர பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

2013, ஏப்பிறல் 26 ஆந் திகதிய 1808 ஆம் இலக்க இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV ஆ உள்ளூராட்சியில் உள்ளூராட்சி அறித்தல்களின்கீழ் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட தலையங்கத்தின் பந்தி 4 இல் விபரிக்கப்பட்டுள்ள பதவிக்கான ஆட்சேர்ப்பு பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் :-

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 4 | நூலக உதவியாளர் வகுப்பு III | 04 | 06/2006 (IV) PL 1 - 2006 A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | கல்வி பொது தராதரப் பத்திர சாதாரணத்தர பரீட்சையில் அல்லது தே. க. பொ. சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

இவ்வறிவித்தலில் தரப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளில் எதுவித மாற்றங்கள் இல்லையெனவும் விண்ணப்ப முடிவுத்திகதி 25.05.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2013.04.26.

5-263

---

**குண்டசாலை பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

குண்டசாலை பிரதேச சபையில் வெற்றிடமாயுள்ள கீழே காணப்படும் பதவிகளுக்கு தகுதியுடைய மத்திய மாகாணத்திற்குள் நிலையான வதிவிடவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிள்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வி தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத்திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| 01 | நூலக உதவியாளர் III | 06 | கல்விப் பொதுத் தராதர சதாரண தர பரீட்சையில் ஒரேதடவையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.- | ரூ, 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 ஆரம்ப சம்பளம் 13,060 ரூபா (12ஆவது கட்டம்) | குறிப்பிடப்பட்ட தகுதிகளை யுடைய விண்ணப்ப தாரிகளை நேர்முகப் பரீட்சையில் ஈடுபடுத்துதல். |
| 02 | காரியாலய உதவியாளர்கள் II | 01 | க. பொ. த. (சா/தர) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது 06 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் | ரூ. 11,730-10×145-12×160 ரூ. 17,600 (ஆரம்ப சம்பளம் ரூ. 13,060) | வாய்மூலப் பரீட்சை |
| 03 | வீதித் தொழிலாளர்கள் II | 01 | 05 ஆவது தரத்தில் அல்லது 06 ஆவது தரத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும் | ரூ. 11,730-10×145-12×160-ரூ. 17,600 (ஆரம்ப சம்பளம் ரூ. 13,060) | வாய் மூலப் பரீட்சை |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வி தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத்திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| 04 | சாரதி II (ஆ) வகுப்பு | 03 | அ. கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையொன்றில் ஆகக் குறைந்தது 09 ஆம் ஆண்டு /08 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும். | PL -3-2006A ரூ. 12,470 - 10×130-10×160- 12×170- ரூ. 18,860 | எழுத்து மூலப் பரீட்சைக்கும் தொழில் திறன் பரீட்சைக்கும் தோற்ற வேண்டும். |
| | | | ஆ. தனிப்பட்ட /வாடகை வாகனங்களும் 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேசன் வெகன்வாகனங்களை செலுத்துவது பற்றிய மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட திறன் பற்றிய சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். | | |
| | | | இ. வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட பின் சாரதியாக 03 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்). | | |
| | | | ஈ. இரவு நேரத்திலும் பகல் நேரத்திலும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முறையான சரீர சுகாதாரத் தன்மை இருக்க வேண்டுமென்பதுடன் முறையான இரண்டு கண் பார்வையினைக் கொண்டவராக இருக்க வேண்டும். | | |
| | | | உ. பாதைகள் சட்டக்கோவை பற்றிய விளக்கமிருக்க வேண்டும். | | |
| | | | ஊ. ஆகக் குறைந்தது 05 அடி உயரத்தை கொண்டவராக இருக்க வேண்டும். | | |
| 05 | மின்சார தொழினுட்ப வியலாளர்கள் (III ஆவது வகுப்பு) | 01 | இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் க.பொ.த. (சா/தரப் ) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் ஏதாவது இரண்டு விடயங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். தொழில் திறமைக்கும் நிபுணத்துவத்திற்குமுரிய பதவிகளுக்கான தொழில்நுட்பத்திறமை நியமனம் செய்யும் அதிகாரமுடையவரால் எதிர்பார்க்கப்படும் மட்டத்தினைப் பெற்றிருக்க வேண்டும். | | |
| | | | அ. தொழிலுக்கேற்ற தேசிய தொழில் தகுதிகளின் இரண்டாம் மட்டத்தில் (NVO2) அல்லது 3 ஆம் மட்டத்தில் (NVO3) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது | | |
| | | | ஆ. தொழில்நுட்ப கல்வி அல்லது பயிற்சி செய்யும் திணைக்களத்தின் (D. T. E. T.) தொழிலுக்கேற்ற ஒரு வருடத்திற்குக் குறையாத பாடத் திட்டமொன்றைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல். | | |
| | | | இ. தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் (NYSC) தொழிலுக்குரிய ஒரு வருடத்திற்குக் குறையாத பாடத்திட்டமொன்றைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது | | |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வி தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத்திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| | | | ஈ. இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபையினால் (VAT) தொழிலுக்குரிய ஒரு வருடத்திற்கு குறையாதபடி பாடத்திட்டமொன்றைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>உ. இலங்கைப் பயிலுனர் தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களத்தினால் (NAITA) ஒரு வருடத்திற்கு குறையாத பாடத்திட்டமொன்றைப் பின் பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>ஊ. தொழில் திறன், தொழில் கல்வி ஆணைக் குழுவினால் பதிவு செய்யப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனத்தினால் தொழிலுக்குரிய ஒரு வருடத்திற்கு குறையாதபடி பாடத்திட்டமொன்றைப் பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல். | | |
| 06 | பிணங்களை சுடும் நிலைய உதவி இயக்குனர் | 01 | ஆகக் குறைந்தது 09 ஆம் ஆண்டு/ 08 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும். | PL-1-2006A<br>ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | நேர்முகப் பரீட்சை |
| 07 | பிணங்களை சுடும் நிலைய இயக்குனர்கள் | 01 | அ. உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக க.பொ.த.(சா/தரப்) பரீட்சையில் அல்லது தேசிய க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அதில் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>ஆ. சம்பந்தப்பட்ட பதவியில் ஆகக் குறைந்தது இரண்டு வருட அனுபவங்களைப் பெற்றிருத்தல் (திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். | PL-2-2006A<br>ரூ. 12,210-10×130-10×145-10×160-10×170-ரூ. 18,600 | நேர்முகப் பரீட்சை |
| 08 | சுகாதாரத் தொழிலாளர் | 04 | ஆகக் குறைந்தது ஆண்டு 09/ ஆண்டு 08 இல் சித்தி பெற்றிருக்க வேண்டும். | PL-1-2006A<br>ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | நேர்முகப் பரீட்சை |

01. **நியமனம் செய்யும் பொது நிபந்தனைகள்.**-

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும். தற்போது அரச சேவையில் நிலையான பதவியில் இருப்பவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை பொருத்தமற்றதாகும்.

(3) மத்திய மாகாணத்தில் 03 வருடங்கள் நிலையான வதிவிடவாளராக இருக்க வேண்டும். (வாக்காளர் இடாப்பில் பெயர் பட்டியலின் படி அல்லது பிரதேச செயளாளர் அவர்களால் வழங்கப்படும் சான்றிதழின் மூலம் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(4) குண்டசாலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் நிலையான வதிவாளர்களுக்கு மேலான முன்னுரிமை வழங்கப்படும்.

(5) நல்ல ஒழுக்கமுடைய நல்ல சுகதேகியாக இருக்க வேண்டும்.

(6) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றில் தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.

(7) அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து இடைநிறுத்தப்படாதவராக இருக்க வேண்டும்.

(8) அரச நிர்வாக சுற்று நிருப இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருக்கக் கூடாது.

(9) தற்போது குண்டசாலை பிரதேச சபையில் சமயோசித, நாளாந்த, தற்காலிக, ஒப்பந்த, தொண்டர் நிலையான அடிப்படையில் சேவையிலீடுபட்டவர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும்.

(10) விண்ணப்பம் கோரப்பட்டவரின் அல்லது கோரப்படும் காலத்தில் மத்திய மாகாணத்தில் இப்பதவிக்குரிய புதிய நியமனம் செய்யும் ஒழுங்கு விதிகள் திருத்தப்படுதல், யாப்புகள் சேர்த்துக்கொள்ளப்படுதல், நியமனங்களை காலதாமதமாக்குதல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல் குண்டசாலை பிரதேச செயலாளருக்குரியதாகும்.

02. **சேவையிலீடுபடுத்தும் நிபந்தனைகள் :-**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியது மூன்று வருட நன்னடத்தை காலத்திற்குட்பட்டது. நிரந்தர ஊழியர்கள் 01 வருட கால சேவை மேற்பார்வை காலத்திற்குட்படுவர்.

(2) விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு உடன்படுதல் வேண்டும்.

(3) அரச மொழிக் கொள்கைக்குட்படல் வேண்டும்.

(4) இந்த நியமன நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை குடியரசின் ஸ்தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் /அரச நிதிப் பிரமாணங்களுக்கும்/ அரசின் திணைக்கள கட்டளைகளுக்கும்/ மத்திய மாகாண சபையின் அல்லது குண்டசாலை பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட வேண்டும்.

03. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் கீழே காணப்படும் ஆவணங்களின் போட்டோ பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;

(4) வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;

(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் ;

(6) அனுபவம் பற்றிய சான்றிதழ் ;

(7) வேறு தகுதிகள் பற்றிய சான்றிதழ்கள்.

04. தொழில் தகவல்களுடன் முழுமையான சுய விபரங்கள் அடங்கிய கீழே காணப்படும் விதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை சம்பந்தப்பட்ட சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2013.05.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கீழே காணப்படும் விலாசத்திற்கு பதிவுத்தபாலின் மூலமோ அல்லது நேரிலோ கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

05. விண்ணப்பப்படிவத்தினை உறையிலிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

06. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தலைவரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும்.

07. குறிப்பிடப்பட்ட தினத்திற்கு பிறகு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
குண்டசாலை பிரதேச சபை.
மெனிக்கின்ன.

2013.04.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குண்டசாலை பிரதேச சபை**

................................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்குரிய பெயர் :----.
2. நிரந்தர விலாசம் :----.
3. பிறந்த திகதி :- வருடம் :----, மாதம் :----, திகதி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : |_|_|_|_|_|_|_|_|_|_|
5. ஆணா/பெண்ணா :----.
6. தொலைபேசி இலக்கம் : |_|_|_|_|_|_|_|_|_|_|

7. திருமணமானவர்/ஆகாதவர் :----.

8. கல்வித் தகைமை :----.

8.1 விண்ணப்பதாரர் இறுதியாக சித்தியடைந்த வகுப்பு :- சிங்களம் :-----, தமிழ் :-----.

8.2 க. பொ. த. (சா/தரப்) பரீட்சை

(i) வருடம் :----. மாதம் :----.

(ii) பரீட்சை இலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| விடயம் | பெறுபேறு | விடயம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8.3 க. பொ. த. (உயர் தரப்) பரீட்சை

(i) வருடம் :----. மாதம் :----.

(ii) பரீட்சை இலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| விடயம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

9. தொழில் தகைமையும் அனுபவமும் :----.

10. வேறு தகைமைகள் :----.

11. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்குமேற்ப உண்மையானதும், சரியானதுமெனத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நியமனங்கள் சம்பந்தமான நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான தகவல் வழங்கப்பட்டுள்ளதென்று உறுதிப்படுத்தப்படுமாயின் நியமிக்கப்படுவதற்கு முன்பு தகுதியற்றவர் எனவும் கிடைத்ததன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுவேன் என எனக்குத் தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(அரச சேவையில்/மாகாண அரச சேவையில்/அரச கூட்டுத்தாபனம்/சட்டரீதியான சபைகளில் சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மட்டும்)

இந்த நிறுவனத்தில் ..................... பதவி வகிக்கும் ......................... அவர்களின் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரது சேவை திருப்திகரமானதென்றும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லையென்றும், அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு எண்ணப்படவில்லையென்றும் உறுதிப்படுத்துகின்றேன் அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போது ஈடுபட்டுள்ள சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் உறுதி கூறுகின்றேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பமும்/
பதவி முத்திரையும்.

திகதி :----.

5-112

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பண்டுவஸ்நுவர பிரதேச சபை

சொந்தமான மயானத்தை பொது மயானமாகப் பிரகடனம் செய்தல்

பண்டுவஸ்நுவர பிரதேச சபையினால் 2013.04.09 ஆந் திகதி நடாத்தப்பட்ட அமர்வின் போது தீர்மான இலக்கம் 09-01 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

எமல் பிரியன்த ஹேரத்,
தலைவர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

### பிரேரணை

சுடுகாடு மற்றும் சுடுகாட்டுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாட்டின் படி மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபைச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் படி உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துவங்களின் பிரகாரம் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் அட்டவணையின் முதலாவது நிரலில் குறித்த மயானங்கள் பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்குரிய பொது மயானமாக இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

### அட்டவணை

நிரல் I

| பிரதேச செயலாளர் பிரிவு | கிராம உத்தியோகத்தர் பிரிவு | பொது மயானத்தின் பெயர் | காணி வரைபடம்/ துண்டு இலக்கம்/ ஏக்கர்/றூட்/பேர்ச்சஸ் |
|---|---|---|---|
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 1379, கனோகம, ருதலியகொட | ரதலியகொட, பொது மயானம் | அ. க. பி. 23344/39/01/- 18 |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 1369, பாலாவிடிய, கஹவிடிய | கஹவிடிய, பொது மயானம் | அ. க. பி. 2297/52/-02/25 |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 1368, துனுபொத, கல்கந்தயாய | கல்கந்தயாய, பொது மயானம் | அ. க. பி. 2215/02/-/01/10 |

5-294

---

## பருத்தித்துறை நகர சபை

கடந்த பல வருடங்களாக பருத்தித்துறை நகரின் மரக்கறிச் சந்தையாக பயன்பட்டுவரும் பருத்தித்துறை நகர சபையின் மரக்கறிச் சந்தை அமைந்துள்ள முழு நிலமும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கென சுவீகரிக்கப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் ஏற்கனவே 14.12.2011 ஆந் திகதிய வலம்புரி பத்திரிகையிலும், 20.10.2012 ஆந் திகதிய தினக்குரல் பத்திரிகையிலும் பொதுமக்கள் தகவலிற்காகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆதனத்தின் எப்பகுதியிலும் எவரும் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ எவ்வித வேலைகளும் செய்வது சட்டப்படி குற்றமான செயலாக கருதப்படும். ஆதனத்தில் உரிமைகோரும் எவரும் நகர சபைக்கு, முழுமையான ஆவணங்களுடன் பிரசுரித்த தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எழுத்து மூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

சபாரவீந்திரன் ஜேபீயூலம்,
நகர பிதா,
பருத்தித்துறை நகர சபை.

நகர சபை,
பருத்தித்துறை.

5-307

# நானாவித அறிவித்தல்கள்

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் (அத்தியாயம்261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை 2013.01.22 ஆம் திகதியில் நடைபெற்ற பொத கூட்ட தீரமானத்தில் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் பிரசுரிக்கப்படுகிறது.*

**தீர்மானம்**

*உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1988 அம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் பகுதி IV (ஆ) -உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏற்புடையதாகும் என கௌரவ வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1994 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதிய 842 ஆம் இலக்க வர்த்தமானியில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்டதுமான நியமத்துணைவிதிகள் 1 ஆம் பாகத்தையும் நியமத்துணைவிதிகள் 11 ஆம் பாகத்தின் குறித்துறைக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் 01 தொடக்கம் 42 வரையுள்ளவற்றையும் வவுனியா வடக்கு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வது என்று வவுனியா வடக்கு பிரதேசசபை இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.*

*மு. பாலசுப்ரமணியம்,*
*தவிசாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை,*
*நெடுங்கேணி,*
*31.01.2013.*

*05-131/1*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*மிருகவதைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)*

***7(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்-2013***

*வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக்கடையும் மிருகவதைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17(1) பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, குறிப்பிட்டஅட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்ட திகதிகளிலும், என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என அறியத்தருகிறேன்.*

*மு. பாலசுப்ரமணியம்,*
*தலைவர்,*
*வவுனியா வடக்கு பிரதேச சபை.*

*வவுனியா வடக்கு பிரதேச சபை,*
*நெடுங்கேணி,*
*வவுனியா.*
*31.01.2013 .*

***அட்டவணை***

1. இலங்கை சுதந்திர தினம்
2. மகாசிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள்(அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள்)
4. உலக மிருக தினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

*05-131/ 2*

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல் கட்டணம் - 2013

*1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126-7 ஊ பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப 23.08. 1988 ஆம் திகதியிட்ட 520/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானிப்பத்திரிகையில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் பகிரங்கப்படுத்தியுள்ள (63/A,62/A,64/A) பக்கங்களில்17.04.1998 ஆம் திகதிய 1024 ஆம் இலக்க வர்த்தமானப்பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணைவிதியின் ஏற்பாடுகளின்படி வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நிர்வாக எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதெனும் தெருவின் மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும் போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலவகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கும் ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு வவுனியா வடக்கு பிரதேச சபையினால் ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். அவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தை செலத்தி புதுப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும் அறியத்தரப்படுகிறது.*

| | | ரூபா ச. |
|---|---|---|
| (1) | சுவர் ஒன்றில் அல்லது பெயர்ப்பலகை ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு (பெயர்ப் பலகை ஒன்றில் இரு பக்கங்களிலும் அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படின் இரு பக்கங்களிற்கு கட்டணம் அறவிடப்படல் வேண்டும்) | 50 0 |
| (2) | ''பெனர்''ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்குஅல்லது அதன் பகுதிக்கு | 25 0 |
| (3) | ஒரு பலகையில் அல்லது ஒரு துணை சகிதம் காட்சிக்கு வைக்கும் மின் விளக்கு ஒளியுடன் கூடிய அறிவித்தலுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு | 75 0 |
| (4) | நிலையான வர்த்தக நிலையங்களில் விளம்பரங்களுடன் கூடிய பெயர் பலகைக்கு சதுர அடிக்கு | 50 0 |

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

*05-131/3*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

கட்டிட அனுமதி - 2013

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன்,சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 600) நடைமுறைக்கு 01.01.1998 ஆந் திகதியில் இருந்து எமது பிரதேச சபைக்கு ஏற்புடையதாக அமுலுக்கு வந்ததற்கு அமைவாக எனக்குள்ள தத்துவங்களையும், அதிகாரங்களையும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அதிகாரங்களையும் கொண்டு சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் பரிசோதனையின் சார்பிலும் ஏனைய விடயங்கள் சார்பிலும் கீழ்க் காட்டப்படும் அட்டவணைப் பிரகாரம் 01.01.2013 இல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்துகிறேன்.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

**அட்டவணை**

| இல | விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | வதிவிடத்திற்கு மதில் கட்டுவதற்கு | 350 0 |
| 2. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு | 750 0 |
| 3. | 500 அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வதிவிடக் கட்டிடங்களுக்கு | 325 0 |
| 4. | 500 சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு | 525 0 |
| 5. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வதிவிடக் கட்டிடங்களுக்கு | 450 0 |
| 6. | 500 சதுர அடிக்கு மேற்பட்ட 1500 சதுர அடிக்கு உட்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தகக் கட்டிடங்களுக்கு | 650 0 |
| 7. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு தளப்பரப்பைக் கொண்ட வதிவிடக் கட்டிடங்களுக்கு | 600 0 |
| 8. | 1500 சதுர அடிக்கு மேற்பட்ட 2500 சதுர அடிக்கு தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டிடங்களிற்கு | 800 0 |
| 9. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்டவதிவிடக் கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | 250 0 |
| 10. | 2500 சதுர அடிக்கு மேற்பட்ட தளப்பரப்பைக் கொண்ட வர்த்தக கட்டிடங்களுக்கு ஒவ்வொரு 1000 சதுர அடிக்கும் அதன் பகுதிகளுக்கும் | 450 0 |
| 11. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வதிவிட கட்டிடங்களுக்கு | 250 0 |
| 12. | கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படவுள்ளதும் ஆனால் தளப்பரப்பில் அதிகரிக்காததுமான வர்த்தக கட்டிடங்களுக்கு | 450 0 |
| 13. | வதிவிட கட்டிடம் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப் புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 175 0 |
| 14. | வர்த்தக கட்டிட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப் புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 375 0 |
| 15. | வதிவிட கட்டிடம் பூர்த்தியின் பின் குடியிருப்பு சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 175 0 |
| 16. | வர்த்தக கட்டிட பூர்த்தியின் பின் குடியிருப்பு சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 375 0 |
| 17. | கட்டிட விண்ணப்பப் படிவக் கட்டணம் | 200 0 |

05-131/4

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம்272)-2013

வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4 ஆம் பிரிவின்படி 2013 ஆம் ஆண்டிற்கான பதிவுக் கட்டணம், அவைகள் ஆண் நாய்களோ, பெண் நாய்களோ எதுவாக இருப்பினும் நாய் ஒன்றிற்கு ரூபா 50.00 ஆக விதிக்கப்பட்டுள்ளது. இக் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

05-131/5

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல்–2013

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கமைவாகவும், உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு 2001 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் கீழ்க்காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேச சபையின் தலைவருக்கு கையளித்ததன் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு, கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு, படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் செய்வது என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்துகிறேன், இவ் வெளிப்படுத்தல் ஆனது இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக்கட்டணங்களை விட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும்.*

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

**அட்டவணை**

1. 25 இற்குக் குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சவர்க்காரம், அழுக்கு அகற்றிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்பு பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
2. 150 மெற்றிக் தொன்னுக்கு குறைவான மொத்தக் கொள்வனவு கொண்ட பாரிய திரவ பெற்றோலிய களஞ்சிய வசதிகள்.
3. நாளொன்றுக்கு 100 கிலோ கிராமிற்கு குறைவானதும், 50 கிலோகிராமிற்கு மேற்பட்டதுமான உற்பத்தி கொள்ளளவு உடைய புகையூட்டிய இறப்பர் பட்டை தட்டு தயாரித்தல் கைத்தொழில்கள்.
4. தனி உற்பத்திச் சட்டத்தின் ஒரு குழுமத்திற்கு 10,000 தென்னஞ்சிரட்டைகளிற்கு குறைவானதும் 10,000 தென்னஞ்சிரட்டைகளிற்கு மேற்பட்ட மொத்த உள்ளீட்டுக் கொள்ளளவு உடைய தென்னஞ்சிரட்டை எரித்தல் கைத்தொழில்.
5. 25 இற்கு குறைவானவர்களும், 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆயுர்வேத, சுதேச மருந்து உற்பத்திகளைத் தயாரித்தல், பிரித்தெடுத்தல், அல்லது முறைப்படுத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
6. ஈயத்தை உருக்கி எழுத்து தயாரித்தல் தவிர்ந்த அச்சகங்கள்.
7. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பற்றிக் கைத்தொழில்கள்.
8. 10 இற்குக் குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை மூலப் பொருளாக பாவித்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
9. 10 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்குக்கு அமர்த்தப்பட்ட சேதனக் கரைப்பான்களைப் பாவித்தலுடன் உலர் சலவை நடவடிக்கைகளுடன் கூடிய வர்த்தக சலவை அகங்கள்.
10. ஈரத் தொழிற்பாடுகளைப் பிறப்பிக்கும் கழிவுகள் தவிர்ந்த தோல் பதனிடும் கைத்தொழில்கள்.
11. இயற்கை இழைகளை வெளிறச் செய்தல் அல்லது சாயமூட்டும் நடவடிக்கையைக் கொண்டிராத தென்னந்தும்பு ஆலைகள்.
12. 25 இற்குக் குறைவாக நெசவுஇயந்திரங்களைக் கொண்ட நெசவுசாலைகள்.
13. 10 இற்கு மேற்பட்ட கைத்தறிகளைக் கொண்ட கைத்தறிச் சாலைகள்.
14. சீனித்தொழிற்சாலை அல்லது சீனி சுத்திகரிப்பு நிலையங்கள் தவிர்ந்த கரும்புக் கைத்தொழில்கள்.
15. 25 இற்கு குறைவானவர்களும், 5 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மரக்கறி, பழம், இறைச்சி, கடல்உணவு மற்றும் பால்பதனிடுதல் கைத்தொழில்கள்.
16. 25 இற்கு குறைவானவர்களும், 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல் கைத்தொழில்கள்.
17. 25 இற்கு குறைவானவர்களும், 5 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெதுப்பக உற்பத்திகள், பிஸ்கட்டுகள், இனிப்புகள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
18. 25 இற்கு குறைவானவர்களும், 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மதுசாரம் தவிர்ந்த பானம் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
19. எரிசோடாவைப் பாவித்து போத்தல் கழுவும் நடவடிக்கைகளைக் கொண்டிராத ஏனைய போத்தலிடும் நிலையங்கள்.
20. நாளொன்றிற்கு 5000 கிலோகிராமிற்கு குறைவான உற்பத்தி கொள்வனவு கொண்ட ஈர நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள்.
21. உலர் நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள் (ஈரமுறை தவிர்ந்த ஏனையவை).
22. அரைக்கும் ஆலைகள்

23. 2500 இற்கு குறைவானதும், 50 இற்கு மேற்பட்டதுமான பறவைகளைக் கொண்டிருக்கும் கோழிப்பண்ணைகள்.
24. 50 இற்குக் குறைவானதும் 05 மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் பன்றிப்பண்ணைகள்.
25. 50 இற்குக் குறைவானதும் 10 மேற்பட்டதுமான விலங்குகளைக் கொண்டிருக்கும் மாட்டு/ஆட்டுப்பண்ணைகள்.
26. நாளொன்றிற்கு 25 மெற்றிக் தொன்னிற்குக் குறைவான உற்பத்தி கொள்வனவு உடைய விலங்குத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
27. 300 கிலோவிற்கு குறைவானதும், 100 கிலோவிற்குக் மேற்பட்டதுமான மொத்த உற்பத்தித்திறன் கொண்ட நீர் அல்லது சூரிய அல்லது காற்று வலு உற்பத்தி தவிர்ந்த மின்சாரப் பிறப்பாக்கி கைத்தொழில்கள்.
28. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான உற்பத்தி திறன் கொண்ட கொன்கிறீட் கலவை நிலையங்கள்.
29. கொன்கிறீட் அச்சுக் கைத்தொழில்கள்.
30. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக்குற்றி தயாரித்தல் கைத்தொழில்கள்.
31. 20 மெற்றிக்தொன்னிற்கு குறைவான உற்பத்தித் திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.
32. 25 இற்குக் குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மட்பாண்டக் கைத்தொழில்கள்.
33. ஓடு மற்றும் செங்கட்டிச் சூளைகள்.
34. கை உபகரணங்களைப் பாவித்து கைகளால் நொறுக்கும் நடவடிக்கைகள் தவிர்ந்த நாளொன்றிற்கு 25 கன மீற்றருக்கு குறைவான உற்பத்தி கொள்ளளவுடைய கருங்கல் நொருக்குதல், அல்லது பதனிடுதல், கைத்தொழில்கள்.
35. நாளொன்றிற்கு 5 மெற்றிக் தொன்னுக்கு குறைந்த உள்ளீட்டுக் கொள்ளளவு கொண்ட எரியூட்டிகள்.
36. போரான் பரிகரணம் மற்றும் மருந்தை பழுதடையாது பாதுகாத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
37. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான கொள்ளளவு உடைய அரியும் ஆலைகள்.
38. 3 குதிரை வலுக்களுக்கு மேற்பட்ட வலுக்களைப் பாவிக்கும் தச்சு வேலைத்தளங்கள்.
39. 20 இற்குக் குறைவான அறைகளைக் கொண்ட உல்லாச விடுதிகள், விருந்தினர் இல்லங்கள் மற்றும் இளைப்பாறும் இல்லங்கள்.
40. 5 இற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சமைக்கும் வசதிகளுடன் கூடிய தங்கு வசதியற்ற உல்லாச விடுதிகள்.
41. 25 மேற்பட்டவர்களும், 200 இற்கு குறைந்தவர்களுமான தங்குனர்களுக்கு உணவு உறைவிட வசதிகள் வழங்கக் கூடிய விடுதிகள்.
42. மாற்று முறை ஒன்றிற்கு 200 இற்கு குறைவானவர்களும், 10 இற்கு மேற்பட்டவர்களுமான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தைத்த ஆடைக் கைத் தொழில்கள்.
43. மாதம் ஒன்றிற்கு 600 கன மீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவுடன் கூடிய தனித்துளை வெடிப்புச் செயற்பாடுகள்.
44. 25 இற்குக் குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட கடைச்சல் பட்டறைகள், உருக்கி ஒட்டும் (வெல்டிங்) வேலைத்தளங்கள் உட்பட்ட இயந்திர வடிவமைப்புத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது ஒன்றிணைக்கும் கைத்தொழில்கள்.
45. பழுதுபார்த்தல், பராமரித்தல், மற்றும் தன்னியக்க வாயு நிலையங்களை ஸ்தாபித்தல் என்பவற்றை செய்யக்கூடிய வசதிகள் உள்ளிட்ட வாகனங்களைப் பழுது பார்க்கும் அல்லது பராமரித்தல் நடவடிக்கைகள் செய்யும் வாகனம் திருத்தும் இடங்கள்.

*05-131/6*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*உரிமக்கட்டணம் அறவீடு-2013*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147, 148, 149, 150 (1), (2), 151, 152 (1), (2), 153 (1), 154 (1) ஆம் பிரிவுகட்கு அடக்கமாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உரிமக்கட்டணம், தொழில் மீதானவரி அறவிடுவது என 2012.12.20 ஆம் திகதிய 4 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. உரிமக்கட்டணங்கள் அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் 31.03.2013 முன் செலுத்தப்படல் வேண்டும் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.*

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

**அட்டவணை**

| இல. | விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 1. | தேனீர்க்கடை நடாத்துதல்"A" | 1000.00 |
| 2. | தேனீர்க்கடை நடாத்துதல்"B" | 800.00 |
| 3. | சாப்பாட்டுக் கடை நடாத்துதல் | 1000.00 |
| 4. | தேனீர்க்கடையும் சாப்பாட்டுக் கடையும் நடாத்துதல் | 1000.00 |
| 5. | பேக்கரி நடாத்துதல் | 1000.00 |
| 6. | முடிவெட்டும் கடை நடாத்துதல் | 1000.00 |
| 7. | சலவைக் கடை நடாத்துதல் | 450.00 |
| 8. | மாட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 1000.00 |
| 9. | மீன்கடை நடாத்துதல் | 1000.00 |
| 10. | கூட்டுறவுச்சங்க விற்பனைக் கடைகள் நடாத்துதல் | 1000.00 |
| 11. | ஆட்டிறைச்சிக்கடை நடாத்துதல் | 1000.00 |
| 12. | சில்லறைக் கடை நடாத்துதல் தரம் A | 1000.00 |
| 13. | சில்லறைக் கடை நடாத்துதல் தரம் B | 550.00 |
| 14. | குளிர்பானக் கடை நடாத்துதல் | 1000.00 |
| 15. | இரும்புப் பொருட்கள் வைத்து விற்பனை | 1000.00 |
| 16. | கட்டடப்பொருட்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல் | 1000.00 |
| 17. | 20 பைக்கட்டுக்களுக்கு மேல் சீமெந்து வைத்து விற்பனை | 1000.00 |
| 18. | மரக்காலை அல்லது மரத்தளபாடம் வைத்து விற்பனை | 1000.00 |
| 19. | தச்சுத் தொழிற்சாலை வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 20. | வீட்டுத் தளபாடங்கள் வைத்து விற்றல் | 1000.00 |
| 21. | விறகு காலை வைத்து நடாத்துதல் | 550.00 |
| 22. | மரக்கறி கடை வைத்து நடாத்துதல் | 350.00 |
| 23. | 1000 தேங்காய்களுக்கு மேல் வைத்து விற்பனை செய்தல் | 1000.00 |
| 24. | ஆபரணங்கள் (பொன்) தயாரித்தல் பழுதுபார்த்தல் | 1000.00 |
| 25. | வைக்கோல் வைத்து விற்பனை செய்தல் | 500.00 |
| 26. | மதுபானசாலை வைத்திருத்தல் | 3000.00 |
| 27. | கடலை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 300.00 |
| 28. | சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500.00 |
| 29. | சைக்கிள் உதிரிப்பாகம் விற்பனை செய்தல் | 1000.00 |
| 30. | தொலைக்காட்சி, வானொலிப் பெட்டி திருத்துமிடம் | 1000.00 |
| 31. | கொல்லுலையும், பட்டறையும் வைத்திருத்தல் | 850.00 |
| 32. | சாதாரண கொல்லுலை வைத்திருத்தல் | 400.00 |
| 33. | கயிறு அல்லது தும்பு உற்பத்தி செய்யும் நிலையம் | 750.00 |
| 34. | கள்ளு சேகரிக்கும் நிலையமும், விற்பனை நிலையமும் | 1000.00 |
| 35. | வெல்டிங் கராச் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 36. | லேத் இயந்திர சாதன நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 37. | பற்றறி சார்ச் பண்ணும் நிலையம் வைத்து நடாத்துதல் | 500.00 |
| 38. | குசன் செய்யும் நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 39. | தொலைக்காட்சி, வானொலி உதிரிப்பாகம் விற்பனை நிலையம் | 1000.00 |
| 40. | கடிகாரம் திருத்தும் நிலையம் | 400.00 |
| 41. | புதிய சைக்கிள் விற்பனை நிலையம் | 1000.00 |
| 42. | பெற்றோல், டீசல், மண்ணெண்ணை எரிபொருள் நிலையம் | 3000.00 |
| 43. | தனிப்பட்ட வைத்தியசாலை வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 44. | புடவை விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 45. | புடவை கைத்தொழில் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 46. | செயற்கை இரசாயன உரம் வைத்திருத்தல் | 1000.00 |
| 47. | கிருமி நாசினி வைத்து விற்பனை செய்தல் | 1000.00 |
| 48. | பாதணிகள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 49. | பெயின்ற், வானிஸ், டிஸ்ரெம்பர் வைத்து விற்பனை | 1000.00 |
| 50. | படம் பிறேம் போடும் கடை வைத்திருத்தல் | 500.00 |
| 51. | இயந்திரம் மூலம் மிளகாய் மற்றும் தானியங்கள் அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1000.00 |
| 52. | அரிசி ஆலை வைத்திருத்தல் தரம் A | 1000.00 |

| இல. | விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 53. | அரிசி லேை வைத்திருத்தல் தரம் B | 1000.00 |
| 54. | 100 கோழிகளுக்கு மேல் பண்ணை வைத்திருத்தல் | 600.00 |
| 55. | புகைப்படம் எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 56. | பாட்டுகள் ஒலிப்பதிவு செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 800.00 |
| 57. | புத்தகங்கள், காகிதாதிகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 750.00 |
| 58. | தொலைக்காட்சி வீடியோ கெசற் வாடகைக்கு விடும் நிலையம் | 750.00 |
| 59. | அங்காடி வியாபாரம் செய்தல் | 300.00 |
| 60. | கொங்கிறீட் கல் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 61. | மணிக்கடை வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 62. | கோழித்தீன் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 63. | தானியங்கள் விற்பனை செய்தல் | 750.00 |
| 64. | செங்கல் உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 750.00 |
| 65. | சீமெந்து பூக்கள் விற்பனை நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 66. | கொங்கிறீட் கம்பம் உற்பத்தி செய்தல் | 1000.00 |
| 67. | அச்சகம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 68. | நல்லெண்ணை ஊற்றி அடைக்கும் நிலையம் | 600.00 |
| 69. | காஸ் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 70. | மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 71. | ஆடைகள் தைக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 |
| 72. | ரயர், ரீயுப், வால்கனஸ் செய்யும் நிலையம் வைததிருத்தல் | 1000.00 |
| 73. | மோட்டார் சைக்கிள் திருத்தும் இடம் வைத்திருத்தல் | 1000.00 |
| 74. | சுண்ணாம்பு சூளை நடாத்துதல் | 350.00 |
| 75. | சுண்ணாம்பு பைக்கற் பண்ணலும் விற்றலும் | 750.00 |
| 76. | நகைக் கடை வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 77. | ஒலி பெருக்கி வாடகைக்கு விடும் நிலையம் நடாத்துதல் | 1000.00 |
| 78. | கல்குவாரி வைத்து நடாத்துதல் | 3000.00 |
| 79. | கல் உடைக்கும் தொழிற்சாலை வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 80. | கருங்கல் பாவனைப் பொருள் செய்தலும் விற்றல் | 1000.00 |
| 81. | தொலைத் தொடர்பு நிலையம் வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 82. | இருப்பிட வசதியுள்ள விடுதி வைத்து நடாத்துதல் | 1000.00 |
| 83. | ஐஸ்கிறீம் தயாரித்தல் விற்றல் | 1000.00 |
| 84. | இனிப்பு டொபி தயாரித்து விற்றல் | 1000.00 |
| 85. | மிக்சர் தயாரித்து விற்றல் | 1000.00 |
| 86. | பால் சேகரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 87. | சவர்க்காரம் உற்பத்தி செய்தல் விற்றல் | 500.00 |
| 88. | மரணச் சடங்குப் பொருட்கள் உற்பத்தி செய்தல் விற்றல் | 1000.00 |
| 89. | ஆடைகளிற்கு பற்றிக் போடுதல் | 500.00 |
| 90. | புகையிலை பதப்படுத்தல் | 500.00 |
| 91. | அப்பியாசக் கொப்பி ஏற்றுமதி | 1000.00 |
| 92. | அப்பியாசக் கொப்பி கட்டுமிடம் | 750.00 |
| 93. | கோழி இறைச்சிக் கடை வைத்திருத்தல் | 1000.00 |
| 94. | திருமணப் பொருத்துனர் தரகு சேவை | 1000.00 |
| 95. | கட்டிட வரைபடம் வரைபவர் | 1000.00 |
| 96. | கட்டிடம் வயரிங் இணைப்பு வேலைகள் தொழில் | 1000.00 |
| 97. | வாகன சேர்வீஸ் நிலையம் | 1000.00 |
| 98. | பசுக்கள் (மாட்டுப்பண்ணை) பண்ணை வைத்திருத்தல் | 750.00 |
| 99. | எலக்ரோனிக் மோட்டார் கொயில் ரீ-வைன்டிங் | 1000.00 |
| 100. | இன்ரர்நெட் கணணி வகுப்புகள் நடாத்துதல் | 1000.00 |
| 101. | தனியார் கல்வி நிலையங்கள் நடாத்துதல் | 500.00 |
| 102. | CD கசற் விற்பனைசெய்தல் | 1000.00 |
| 103. | வெற்றிலைக் கடை நடாத்துதல் | 500.00 |
| 104. | மோட்டார் வாகனங்கள் விற்பனை நிலையம் | 1000.00 |
| 105. | ரயர், ரியூப் விற்பனை நிலையம் | 750.00 |
| 106. | கிடுகு விற்பனை நிலையம் | 400.00 |
| 107. | தனியார் உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம் | 1000.00 |

| இல. | விபரம் | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 108. | அழகுபடுத்தல் நிலையம் நடாத்துதல் | 1000.00 |
| 109. | மோட்டார் உதிரிப்பாக நிலையம் | 1000.00 |
| 110. | வலைப்பின்னல் நிலையம் (நெற்கபே) ஒன்றை நடாத்துதல் | 750.00 |
| 111. | கட்டிட ஒப்பந்தக்காரர் நிலையம் | 1000.00 |
| 112. | செல்லப்பிராணி நிலையம் | 500.00 |
| 113. | பாரிய புடவைக் கைத்தொழில் வைத்திருத்தல் | 1000.00 |
| 114. | மாட்டுப்பட்டி 10 மாடுகளுக்கு மேல் வைத்திருத்தல் | 100.00 |
| 115. | மட்பாண்ட உற்பத்தி விற்பனை நிலையம் | 1000.00 |
| 116. | பலசரக்கு விற்பனை நிலையம் A | 1000.00 |
| 117. | பலசரக்கு விற்பனை நிலையம் B | 800.00 |
| 118. | பலசரக்கு விற்பனை நிலையம் C | 650.00 |
| 119. | பலசரக்கு சிறு வியாபாரம் | 500.00 |
| 120. | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம் (சைக்கிள், நடை, சிறிய வண்டிகள் மூலம்) | 500.00 |
| 121. | நடமாடும் பொருட்களுக்குரிய வியாபாரம்(சிறு வண்டிகள் தவிர்ந்த வான் போன்ற ஏனைய வாகனங்கள் மூலம்) | 1000.00 |
| 122. | தொலைத் தொடர்புக் கோபுரம் | 50000.00 |
| 123. | முச்சக்கர வண்டி | 3000.00 |
| 124. | வங்கி சேவை உரிமம் (ஒவ்வொரு தனித்தனி சேவைகளுக்கானது) | 3000.00 |
| 125. | நடைபாதை வியாபாரத்திற்கான ஒரு நாள் உரிமக் கட்டணம் | 250.00 |
| 126. | உற்சவகால விசேட உரிமக் கட்டணம் : | |
| | சிறிய வியாபாரம் | 250.00 |
| | ஐஸ்கிறீம் கடை | 1000.00 |
| | ஐஸ்கிறீம் வான் | 1000.00 |
| | கச்சான் கடை | 1000.00 |
| | உலோகப் பொருள் விற்பனைக் கடை | 1000.00 |
| | அழகு சாதனப் பொருள் விற்பனைக் கடை | 1000.00 |
| | உணவகம் | 1000.00 |
| | தள்ளுவண்டில் வியாபாரம் | 500.00 |
| | துவிச்சக்கரவண்டில் வியாபாரம் | 500.00 |

05-131/7

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*உள்ளூராட்சி மன்றங்களின் மறுசீரமைப்பு சுற்றுநிருபத்திற்குஅமைவாக தொலைத்தொடர்பு கம்பங்களின் அறவீடு அறிவித்தல் -2013*

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல வீதி ஓரங்களில் நாட்டப்படும் தொலைபேசிக்கம்பங்கள் அனைத்திற்கும் அறவிடற்பாலதான வியாபார அறவீட்டுக்கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக, உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இணைப்பு 1 இல் பிரேரணைகளும் மற்றும் சிபார்சுகளும் என்ற பகுதியில் நிதி முகாமைத்துவம் வருமானங்களும் என்ற உப தலைப்பின் கீழ் இல. 6.5 பகுதியில் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அடங்கலாக தொலைபேசி கம்பங்களுக்கு வியாபார அறவீட்டு வரி ஒன்றை அறவீடு செய்வதாக கடந்த 2013. 01.22 ஆம் திகதியில் நடை பெற்ற சபையின் விசேட கூட்டத்தில் 12 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கம்பங்களுக்கான வரியினை 01.01.2013 ஆந் திகதியில் இருந்து வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகிறது.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

| இல | தன்மை | அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 01. | 24 அடி கொண்ட தொலைபேசி கம்பம் ஒன்றிற்கு வருடம் ஒரு தடவை | 120 0 |
| 02. | 24 அடி கொண்ட தொலைபேசி அமைவு பரிசோதனைக் கட்டணம் (ஆரம்பக் கட்டணம்) | 150 0 |

05-131/8

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

### கழிவுப் பொருள் துப்பரவாக்கும் சட்டம் (126 ஆம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல் - 2013

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 1024 ஆம் இலக்க 17.04.1998 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 520/7 ஆம் இலக்க 23.08. 1988 திகதிய நியமனத் துணைவிதியின் 9 ஆம் பிரிவில் "கழிவுப் பொருள் துப்பரவாக்கும் சேவை வழங்கப்படுகின்ற ஏழ்மை காரணமாக பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய துப்பரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு மாதந் தோறும் செலுத்துதுல் வேண்டும் என்பதற்கு இணங்க குப்பை அகற்றப்படும் இருப்பிடம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா 60 கட்டணமாக அறவிடுவது என இத்தால்அறியத்தரப்படுகின்றது .

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

| | |
|---|---|
| கடைகள், தேனீர்ச்சாலைகள் கழிவுகளின் அளவுக்கு ஏற்ப | 200.00-1800.00 |
| அரச தனியார் நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றிற்கு | 200.00-1800.00 |
| ஹோட்டல் தரத்திலான உணவகங்கள் மாதம் ஒன்றிற்கு | 1800.00-3000.00 |

05-131/9

---

## வவுனியா வடக்கு பிரதேச சபை

ஆதன வரி விதித்து அறவிடல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1), (2), (3), ஆம் பிரிவுகளின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள் இவ் ஆண்டில் அப்பிரதேசங்கள் அடைந்துள்ள அபிவிருத்திற்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளில் ஆதனவரி அறவிடுவதற்கான முன்னாயத்த வேலைகள் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

நெடுங்கெணி வடக்கு
நெடுங்கேணி தெற்கு
கனகராயன் குளம் வடக்கு
கனகராயன் குளம் தெற்கு
புளியங்குளம் வடக்கு
புளியங்குளம் தெற்கு
மதியாமடு
நைனாமடு

*05-131/ 10*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 109 (ஈ) பிரிவின் பிரகாரம் அறிவித்தல்-2013*

*குழாய்க் கிணறுகளுக்கான சேவைக்கட்டண அறவீடு வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சகல குழாய்க் கிணறுகள் சார்பிலும், குழாய்க் கிணறு ஒன்றினைப் பாவிக்கும் பாவனையாளர் குடும்பம் ஒன்று மாதாந்தம் ரூபா 20.00 சேவைக்கட்டணம் ஒன்றை 01.01.2013 ஆம் திகதியிலிருந்து அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 109 (ஈ) இன் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.*

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

*05-131/ 11*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

***1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வரி அறிவித்தல்-2013***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக வவுனியா வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை வாகன தரிப்பிட கட்டணம் கீழ்வருமாறு அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

**அட்டவணை**

| இல | தன்மை | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 01. | ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் மாதாந்தம் | 100.00 |
| 02. | ஒவ்வொரு கை வண்டிக்கும் மாதாந்தம் | 100.00 |
| 03. | முச்சக்கர வண்டி தரிப்பிடம் மீதான வரி மாதாந்தம் | 600.00 |
| 04. | இரு சக்கர உழவு இயந்திரம் தரிப்பிடம் மீதானவரி வருடாந்தம் | 600.00 |
| 05. | நான்கு சக்கர உழவு இயந்திரம் | 600.00 |

*05-131/12*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*148 (4) ஆம் அட்டவணையின் பிரகாரமான வாகனங்கள் மீதான வரி அறிவித்தல்-2013*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை துவிச்சக்கர வண்டி உரிம கட்டணத்தினைரூபா 20 ஆக அறவிடுவது என 04 ஆம் இலக்க 20.12.2012 ஆம் திகதிய சபைத் தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கமைவாக குறித்த கட்டணத்தை அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
*31.01.2013.*

**அட்டவணை**

| இல | தன்மை | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 01. | ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிஉரிமம் வருடாந்தம் | 20 0 |

*05-131/13*

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல் -2013

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவுக்கு உட்பட்ட வகையில் வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு 20.12.2012 ஆம் திகதிய பொதுச் சபைக் கூட்டத்தில் 13 ஆம் இலக்க தீர்மானம் மூலம் பின்வருமாறு நிறைவேற்றப்படடுள்ளது.*

பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதியில் பகல், இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகள் நடமாடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளில் இரவு வேளையில் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக பிடிபடும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும் தண்டப்பணத்தொகை ரூபா 1000.00 மும் சிறிய கால்நடைகள் 500.00 ஆகவும் பராமரிப்புச் செலவாக ஒரு நாளைக்கு ரூபா 200.00 ம் அறவிடப்படும்.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

05-131/14

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

இடங்கள் தெரிவு செயதல்-2013

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் இடங்கள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு என 22.01.2013 ஆம் திகதிய கூட்டத்தில் 2 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்படடுள்ளது.

**நடமாடும் மற்றும் ஒரு வாரத்திற்குறப்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு**
நெடுங்கேணி- கமநலசேவைகள் நிலையத்தில் இருந்து புதிய பஸ்தரிப்பு நிலையம்
கனகராயன்குளம்-கனகராயன்குளம் மரக்கறி சந்தைக்கு அருகில்
புளியங்குளம்-புளியங்குளம் மரக்கறிச் சந்தைக்காணி

**வாகன தரிப்பிடம்**
நெடுங்கேணி ஒட்டிசுட்டான் சந்தி
நெடுங்கேணி பஸ் நிலையம், மரக்கறிச்சந்தை முன்பகுதி
புளியங்குளம் சந்தை
கனகராயன்குளம்சந்தி, கனகராயன்குளம்சந்தை முன்பகுதி

**திண்மக்கழிவு புதைக்கும் இடம்**
சூடுவெந்தான்- பெரியமடு சூடுவெந்தான் வீதியில் இருந்து 2 கி.மி அப்பால்

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

05-131/15

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மலம் அகற்றுவதற்கான அறிவித்தல்-2013

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 95 ஆம் இலக்க அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப வவுனியா வடக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வீட்டு, நிறுவனங்களின் மலகூடங்களின் கழிவுகளை எமது வாகனங்களான கலிஎம்ரியர் மூலம் அகற்றுவது தொடர்பில் கட்டணம் ஒன்றினை 01.01.2013 ஆம் திகதியில் இருந்து கீழ்வருமாறு

அறவிடுவதென கடந்த 2013.01.22 ஆம் திகதிய 12 ஆம் இலக்க தீர்மானம் சபையால் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகிறது.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

**அட்டவணை**

| இல | தன்மை | 2013 ஆம் ஆண்டிற்கான அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| 01. | கலிஎம்ரியர் மூலம் மலம் அகற்றல் கட்டணம் (நிர்வாக பரப்பெல்லைக்கு உள்ளான பகுதிகள்) | 8500 0 |

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

05-131/16

---

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

இடங்கள் வரையறை செய்தல்-2013

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் மரக்கறி மற்றும் மீன் சந்தைகள் தற்போது வழங்கப்பட்டதை தொடர்ந்து சந்தைகளில் இருந்து 2 km சுற்றுவட்டாரப் பகுதியில் மரக்கறி, மீன் வியாபாரம் விற்பனை செய்வதற்கு தடை செய்தல் என 20.12.2012 திகதிய கூட்டத்தில் 7ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மு. பாலசுப்பிரமணியம்,
தலைவர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.

வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி,
வவுனியா.
31.01.2013.

05-131/17

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.